දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය - පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
தொடர் தொலைக் கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
CENTRE FOR DISTANCE & CONTINUING EDUCATION – UNIVERSITY OF PERADENIYA

பொதுக் கலைமாணி (வெளிவாரி பழைய பாடத்திட்டம்) (ஒக்டோபர் 2019)

# ECG 1 பொருளியல் I

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் இரு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக
இவ்வினாத்தாளில் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கை 10 ஆகும்.
ஒவ்வொரு வினாவிற்கும் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புள்ளிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன
வரைபடத்தாள்கள் வழங்கப்படும், கணிப்பான்கள் அனுமதிக்கப்படுகின்றன
( மூன்று மணித்தியாலங்கள் )

## பகுதி I

1. வாராந்த வருமானமாக ரூபா 36.00 இனைக் கொண்டுள்ள ஒரு நுகர்வோன் X, Y ஆகிய இரு பொருட்களை நுகர விரும்புகின்றபோது, அவற்றின் மொத்தப் பயன் சார்புகள் பின்வரும் சமன்பாடுகள் மூலம் தரப்பட்டுள்ளன:-

$$TU_x = 50Q_x - 5Q^2{}_x$$
$$TU_y = 32Q_y - 4Q^2{}_y$$

X பொருளின் விலை ரூபா 5.00 எனவும் Y பொருளின் விலை ரூபா 8.00 எனவும் கருதிக் கொள்க.

(i) இந் நுகர்வோனின் சமநிலைக் கொள்வனவுத் தொகைகளைக் கணிப்பிடுக. (05 புள்ளிகள்)
(ii) இச்சமநிலையின் கருத்தினை நீர் எவ்வாறு விளக்குவீர்? (05 புள்ளிகள்)
(iii) மேற்படி சமநிலையில் பணத்தின் எல்லைப் பயனைக் கணிப்பிடுக. (05 புள்ளிகள்)
(iv) 'ஏனையவை மாறாது உள்ளபோது', X பொருளின் விலை ரூபா 2.00 இனால் அதிகரிப்படைகின்றது எனக் கருதுக. இந்நுகர்வோனின் புதிய சமநிலைக் கொள்வனவுத் தொகைகள் யாவை? (05 புள்ளிகள்)

2. (i) நுகர்வோர் கேள்விக் கோட்பாடு தொடர்பான பயன் அணுகுமுறைக்கும், சமநோக்கு வளைகோட்டு அணுகுமுறைக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக. (10 புள்ளிகள்)
(ii) இவ்விரு அணுகுமுறைகளில் தெரிவு செய்யப்படக்கூடியது எது? ஏன்? (05 புள்ளிகள்)
(iii) இவ்விரு அணுகுமுறைகளில் ஏதாவது ஒன்றினைப் பயன்படுத்தி, நீர் எவ்வாறு ஒரு கேள்வி வளையியினைத் தருவிப்பீர்? (05 புள்ளிகள்)

3. ஒரு நிறைபோட்டி நிறுவனத்தின் செலவுகள் மற்றும் எல்லை வருமான (MR) வளையிகளைப் பயன்படுத்தி, பின்வருவனவற்றினைக் காண்பித்து அவற்றினை விளக்குக:-
(i) இந்நிறுவனம் சாதாரண இலாபத்தினை உழைத்துக் கொண்டிருத்தல். (04 புள்ளிகள்)
(ii) இந்நிறுவனம் பொருளாதார இலாபத்தினை உழைத்துக் கொண்டிருத்தல். (04 புள்ளிகள்)
(iii) இந்நிறுவனம் உற்பத்தியினை நிறுத்துவதற்கு தீர்மானத்தினை மேற்கொள்ள வேண்டியதாக இருத்தல். (06 புள்ளிகள்)
(iv) ஒரு நிறைபோட்டித் தொழிலில் உள்ள எல்லா நிறுவனங்களும் நீண்ட காலத்தில் சாதாரண இலாபத்தினை மட்டுமே ஈட்டக் கூடியதாக இருப்பது ஏன் என்பதனை விளக்குக. (06 புள்ளிகள்)

4. (i) ஊழியத்திற்கான கேள்வியினை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை? (06 புள்ளிகள்)
(ii) ஒரு நிறைபோட்டி ஊழியச் சந்தையில் கூலிகள் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றன என்பதனை விளக்குக. ஒரு தனியுரிமைச் சந்தையில் கூலி நிர்ணயிக்கப்படுவதிலிருந்து இது வேறுபடுகின்றதா? (14 புள்ளிகள்)

5. பின்வருவன தொடர்பாகச் சிறு குறிப்புக்கள் எழுதுக:-
(i) வருமான நுகர்வு வளைகோடு
(ii) சம உற்பத்திக் கோடும், எல்லைத் தொழில்நுட்ப பதிலீட்டு வீதமும்
(iii) குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி
(iv) தனியுரிமைப் போட்டி நிறுவனத்தின் இயலளவுப் பயன்பாடு (தலா 05 புள்ளிகள் )

## பகுதி II

6. பின்வரும் பொருளாதாரத்தினைக் கவனத்தில் கொள்க. (தொகைகள் யாவும் மில்லியன் ரூபாவில்)

| | |
|---|---|
| நுகர்வுத் தொழிற்பாடு | C = 180+0.8Yd |
| முதலீடுகள் | I = 300 |
| அரசாங்கச் செலவீடு | G = 400 |
| வரித் தொழிற்பாடு | T = 100+0.25Y |
| தேறிய ஏற்றுமதிகள் | (X-M) = 200 |

(i) இப்பொருளாதாரத்தின் சமநிலைத் தேசிய வருமானத்தினைக் கணிப்பிடுக. (05 புள்ளிகள்)
(ii) தொடர்புடைய வருமானப் பெருக்கியின் பெறுமதியினைக் கணிப்பிடுக. (05 புள்ளிகள்)
(iii) முதலீடுகள் ரூபா 200 மில்லியனாக வீழ்ச்சியடைவதாகக் கருதுக. புதிய சமநிலைத் தேசிய வருமான மட்டம் யாது? .(05 புள்ளிகள்)
((iv) மேற்படி சமநிலையில், அரசாங்கத்தின் பாதீட்டுப் பற்றாக் குறையினைக் கணிப்பிடுக. (05 புள்ளிகள்)

7. (i) ஒரு உயர்வான மொத்த தேசிய வருமான மட்டத்தினை அடைந்து கொள்வதில் நாணயக் கொள்கையின் பங்கினைச் சுருக்கமாக ஆராய்க. (10 புள்ளிகள்)
(ii) நாணய தளத்தின் உள்ளடக்கக் கூறுகளை விளக்குக. நாணய தளத்தின்மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் யாவை? (10 புள்ளிகள்)

8. (i) முழு நயக் கோட்பாட்டினையும் ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாட்டினையும் ஒப்பிட்டு வேறுபடுத்துக. (08 புள்ளிகள்)
(ii) நெகிழும் நாணய மாற்று வீத முறையின் அனுகூலங்களையும், பிரதிகூலங்களையும் சுருக்கமாக விளக்குக. (12 புள்ளிகள்)

9. (i) சென்மதி நிலுவையில் ‘குறை நிலை’ என்ற எண்ணக்கருவினை விளக்குக. (08 புள்ளிகள்)
(ii) நாணய மாற்று வீத முறையினை உருவாக்குவதிலும், அதனை நிர்வகிப்பதிலும் ‘பிரிட்டன்வூட்ஸ்’ முறையின் பங்கினை விளக்குக. (12 புள்ளிகள்)

10. பின்வருவன தொடர்பாகச் சிறு குறிப்புக்கள் எழுதுக:-
(i) வருமானப் பெருக்கியின் நிர்ணயம்
(ii) பாதீட்டுப் பற்றாக் குறையும், வர்த்தக நிலுவையும்
(iii) சர்வதேச நாணய நிதியம் (IMF)
(iv) தன்னியல்பான செலவீடுகளும் தூண்டப்பட்ட செலவீடுகளும் (தலா 05 புள்ளிகள் )

---